2014 ஆகஸ்ட் 6]

353—

கால்நடை மருந்தகம்

***47721—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், 24 வீரபாண்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலே 24 வீரபாண்டி ஊராட்சியைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளதால் மேற்படி ஊராட்சியிலே ஒரு கால்நடை மருந்தகம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

"மாண்புமிகு முதல்வர் அம்மா எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
பாதந்தொட்டு வணங்குகிறேன் எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
ஆடு, மாடு, ஜீவனுக்கு எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
சிறப்பு மருந்தகத்தைத் தந்தவர்தான் எங்கள் குல தெய்வம்

அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
மூன்றாண்டு சாதனைதான் எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
முல்லைப் பெரியாறை மீட்டெடுத்தார் எங்கள் குல
தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)
காவேரியை மீட்டெடுத்தார் எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நாளை கச்சத் தீவை மீட்டெடுப்பார் எங்கள் குல தெய்வம்,
அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாங்க.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: உண்மையான தொண்டனுக்கு எங்கள் குல தெய்வம், அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த பதவி தந்தவர்தான் எங்கள் குல தெய்வம், அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி) கொடி பிடித்த தொண்டனுக்கும் எங்கள் குல தெய்வம், அம்மா, எங்கள் குல தெய்வம்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோட்டைக்குள்ளே அழைத்து வந்தார் எங்கள் குல தெய்வம், அம்மா, எங்கள் குல தெய்வம்." (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட 24 வீரபாண்டி ஊராட்சியிலே கால்நடை மருந்தகம் அமைப்பதற்குக் கேட்டிருந்தேன். கேட்டவுடன் கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 354, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.